செய்திக்குறிப்பு எண் : 3 28.1.09

வேளாண்மை அமைச்சர் அலுவலகம்

## பத்திரிக்கை செய்தி

வேளாண்மை மற்றும் அதன் சகோதரத் துறைகளான தோட்டக்கலை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக் துறைகளில் கடந்த 18 ஆண்டுகளாக நிரப்பப்படாமல் காலியாக உள்ள உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் நிரப்ப கடந்த 12.1.2009ம் தேதி முதல் மாநிலம் முழுவதும் நேர்முகத் தேர்வு நடைபெற்று வருகின்றது. தகுதியின் அடிப்படையில் நடைபெறும் இந்த நேர்முகத் தேர்வில் ஆதாயம் தேட சிலர் குறுக்கு வழியினை பின்பற்றுவதாக தெரிய வருகிறது.

தகுதியின் அடிப்படையில் நடைபெறும் இந்த நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டுள்ளவர்கள் யாரிடமாவது பணம் கொடுத்து வேலை வாங்கி விடலாம் என்று நம்பி ஏமாந்து விட வேண்டாமென தெரிவிக்கப்படுகிறது.

28.1.09.

வீரபாண்டி எஸ். ஆறுமுகம்
வேளாண்மைத் துறை அமைச்சர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9